Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.106/2018

**Depositions of PW- 8**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ஆனந்தன் | Occupation | உதவியாளர் |
| Father's name | ராஜேந்திரன் | Calling | |
| Village | சாப்டூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of July 2026.

23.07.2026

1, 2ம் எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சாப்டூரில் குடியிருந்து வருகிறேன். நான் மதுரை தெற்கு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக வேலை செய்து வருகிறேன். நான் இதற்கு முன்னர் 2017ம் ஆண்டிலிருந்து 2020ம் ஆண்டு வரை கீழராஜகுளராமம் சார்பதிவாளராக பணிபுரிந்தேன். கடந்த 16.04.2018 ம் தேதி வன்னியம்பட்டி காவல்நிலைய குற்ற எண்.29/17 வழக்கு சம்மந்தமாக ஆவணங்கள் கேட்கப்பட்ட கடிதத்தை பெற்று ஆவண எண்கள்.100/2000, 2289/2000, 3193/2001, 364/2005 ஆகியவற்றுக்கான சான்றிட்ட நகல்களை கொடுத்தேன்.

1) **நான் கொடுத்த 14/2018 எனக்குறிப்பிடப்பட்ட கடிதம் அசாஆ.10 ஆகவும் சார்பதிவாளர் ஆவண எண்.100/2000 சான்றிட்ட நகல் அசாஆ.11 ஆகவும், சார்பதிவாளர் ஆவண எண்.2289/2000 சான்றிட்ட நகல் அசாஆ.12 ஆகவும், சார்பதிவாளர் ஆவண எண்.3193/2001 சான்றிட்ட நகல் அசாஆ.13 ஆகவும், சார்பதிவாளர் ஆவண எண்.364/2005 சான்றிட்ட நகல் அசாஆ.14 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

வன்னியம்பட்டி காவல்நிலையத்திலிருந்து எனக்கு அனுப்பப்பட்ட வேண்டுகோள் கடிதத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எங்கள் அலுவலக பதிவேட்டில் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வேண்டுகோள் கடிதத்தினை பார்வையிட்டால் தான் நான் இவ்வழக்கு சம்மந்தமான ஆவணங்களை கொடுத்தேனா என்று எனக்கு நினைவிற்கு வரும் என்றால் சரியல்ல. மேற்படி நான் கொடுத்ததாக கூறப்படும் ஆவணங்கள் நான் கீழராஜகுலராமன் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி 4 ஆவணங்களும் முறையான முத்திரை தொகை செலுத்திதான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பொதுவாக ஒரு இடமோ அல்லது வீடோ பத்திர பதிவு செய்வதற்கு முன்னர் எங்கள் அலுவலத்திலிருந்து கள ஆய்வு மேற்கொண்ட பின்னர்தான் பத்திரபதிவு செய்வோம் என்றால் வீட்டிற்கு மட்டும் தான் கள ஆய்வு செய்வோம் காலி மனைகளுக்கு அவ்வாறு கள ஆய்வு செய்யப்படுவதில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.